# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 102 of 2021

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமு |
| தந்தை பெயர் | : | கோவிந்தசாமி |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 10.06.2025 அன்று **செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1- மீண்டும் அழைக்கப்பட்டு 6ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**6ஆம் பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. இந்த நீதிமன்றத்தில் நீங்கள் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற விபரம் தெரியுமா என்றால்

சத்தியநாராயணன், ஞானசேகரன் மற்றும் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. நீங்கள் என்ன பரிகார்ம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள்

நிலம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் நான் தான் விவசாயம் செய்கிறேன்.

3. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் 6 நபர்களை பிரதிவாதிகளாக இணைத்துள்ளீர்கள் அந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. 6ம் பிரதிவாதியான ராயல் வீராசாமி என்பவர் மீது ஏன் வழக்கு தொடுத்தீர்கள்

ஞானசேகரனுடன் அவரும் நிலத்தினை அபகரிக்க வந்தார்.

5. இந்த நிலத்திற்கான வாடகை யாரிடம் கொடுக்கிறீர்க்ள் என்றால்

தினகரன் என்பவரிடம் கொடுக்கிறோம்.

6. தினகரன் சத்தியநாராயணன் என்பவரும் சேர்ந்து 3ம் பிரதிவாதியான ஞானசேகரன் என்பவருக்கு நிலத்தினை விற்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும்.

7. 3ம் பிரதிவாதி முதல் 6ம் பிரதிவாதி வரை உள்ளவர்கள் உங்கள் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்ய வந்ததற்கு ஏதேனும் புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். 8. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உடலப்பட்டு என்னும் இடத்தில் அந்த புகார் குறித்து என்னை விசாிர்த்தார்கள்.

8. கடலூர் வருவாய் ஆட்சியர் உங்களை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஞாபகம் இல்லை.

9. 1ம் மற்றும் 2ம் பிரதிவாதியானவர்கள் 2019 லேயே 3ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தினை விற்பனை செய்திருப்பதால் எந்த பரிகாரமானாலும் அவரிடம் மட்டுமே கோர முடியுமே தவிர 6ம் பிரதிவாதியிடம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அவரும் ஞானசேகரனுடன் இருந்தார்.

10. வழக்கு சொத்துக்கு அருகாமையில் 6ம் பிரதிவாதியின் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. இதன் காரணமாக அவரையும் ஒரு பிரதிவாதியாக சேர்த்தீர்களா என்றால் சரிதான்.

11. 70 ஆண்டுகாலமாக வழக்கு சொத்தினை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறோம். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி சட்டத்திற்கு முரணாக வழக்கு சொத்தினை விற்றிருந்தால் அவர்கள் மீதே நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும் இந்த வழக்கு 6ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் இதனால் இவ்வழக்கு தள்ளுபடிக்கு அருகமானது என்றாலும் சரியல்ல.